செ.வெ.எண்: 36/2018 நாள்: 11.01.2018

**ஒகி புயல் காரணமாக ஆழ்கடலில் காணாமல் போன மீனவர்களின் டி.என்.ஏ. மாதிரிகளை வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தல்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் 30.11.2017 அன்று தாக்கிய ஒகி புயலின் காரணமாக கடலில் மீன்பிடிக்க சென்று மீன்பிடி கலன்கள் கடலில் மூழ்கி காணாமல் போன மீனவர்களில் இதுவரை கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த 150 மீனவர்கள் குறித்த தகவல் அறியப்படாமல் உள்ளது. ஒகி புயல் நிகழந்த பின் சில தினங்களுக்கு உள்ளாக ஏற்கனவே கடற்கரைப் பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட உடல்கள் கேரளா மாநில மருத்துவமனைகளில் வைக்கப்பட்டு இருந்தது. இதில் டி.என்.ஏ. பரிசோதனை மூலம் இதுவரை கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த 15 மீனவர்களின் உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது. மேலும் அடையாளம் தெரியாத 15 உடல்கள் தற்போது கேரளா மாநிலம் அரசு மருத்துவமனைகளில் வைக்கப்பட்டுள்ளது. தற்போது கேரளா அரசிடமிருந்து வரப்பெற்றுள்ள தகவல்படி அடையாளம் தெரியாமல் கேரளா மாநில அரசு மருத்துவமனைகளில் வைக்கப்பட்டுள்ள உடல்கள் 22.01.2018-ற்கு பிறகு புதைக்கப்பட உள்ளதாகவும், இதுவரை டி.என்.ஏ. மாதிரி வழங்காமல் உள்ள காணாமல் போன மீனவர்களின் குடும்பத்தினர் 15.01.2018-ற்குள் கேரளா மாநிலம் ராஜீவ்காந்தி பயோ டெக்னாலஜி மையத்தை தொடர்பு கொண்டு மாதிரி வழங்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, ஒகி புயலின் போது காணாமல் போய் இதுவரை தகவல் அறியப்படாத மீனவர்களில் டி.என்.ஏ. மாதிரி இதுவரை வழங்காமல் உள்ள காணாமல் போன மீனவர்களின் இரத்த உறவினர்கள் 15.01.2018-ற்குள் கேரளா மாநிலம் திருவனந்தபுரம் ராஜீவ்காந்தி பயோ டெக்னாலஜி மையத்தில் தொடர்பு கொண்டு டி.என்.ஏ. மாதிரி வழங்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். 22.01.2018-ற்கு பிறகு அடையாளம் தெரியாமல் கேரளா மருத்துவமனைகளில் வைக்கப்பட்டுள்ள உடல்கள் புதைக்கப்படும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.